**ஜூலை – 23**

# TNPSC துளிகள்


- உலக சுகாதார அமைப்பால் கருவிழி பாதிப்புத் தொற்று இல்லாத நாடாக செனகல் அறிவிக்கப்பட்டுள்ளதோடு, மேலும் உலகளவில் கருவிழி பாதிப்புத் தொற்றை ஒழித்த 25வது நாடாகவும், ஆப்பிரிக்காவில் 9வது நாடாகவும் மாறியுள்ளது.
- உக்ரைன் ஆனது 125வது உறுப்பினர் நாடாகவும், கிழக்கு ஐரோப்பிய நாடுகள் குழுவில் இருந்து 20வது நாடாகவும் 2002 ஆம் ஆண்டின் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் ஸ்தாபன ஒப்பந்தமான ரோம் சட்டத்தில் இணைகிறது.
- சமீபத்தில், ஐரோப்பிய விண்வெளி நிறுவனமானது (ESA) ஐக்கியப் பேரரசை தளமாகக் கொண்ட Frazer-Nash Consultancy உடன் இணைந்து, ஒரு ஹைப்பர்சோனிக் வேக விண்வெளி விமானத்தை உருவாக்க INVICTUS எனும் ஆராய்ச்சி திட்டத்தை அறிமுகப் படுத்தியது.
- இந்தியாவின் மிகப்பெரிய வங்கியான SBI ஆனது, 2025 ஆம் ஆண்டிற்கான உலகின் சிறந்த நுகர்வோர் வங்கியாக குளோபல் ஃபைனான்ஸ் இதழால் தேர்ந்தெடுக்கப் பட்டது.
    - இந்த விருது அமெரிக்காவின் வாஷிங்டனில் நடைபெறும் உலகின் சிறந்த வங்கி என்ற வருடாந்திர நிகழ்வில் SBI தலைவர் C.S. செட்டிக்கு வழங்கப்படும்.

# தமிழ்நாடு செய்திகள்


## தமிழ்நாடு குற்றவியல் நடைமுறை விதிகள், 2025

- தமிழ்நாடு குற்றவியல் நடைமுறை விதிகள் 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் அமலுக்கு வந்தன.
- 2023 ஆம் ஆண்டின் பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதாவுடன் (BNSS) (புதிய குற்றவியல் நடைமுறைச் சட்டம்) மாநிலத்தின் நடைமுறைக் கட்டமைப்பை இணைப்பதற்காக தமிழ்நாடு அரசால் இவை அறிவிக்கப்பட்டன.
- ஒரு காவல் நிலையம் இப்போது அதன் அதிகார வரம்பிற்கு வெளியே நடைபெற்ற குற்றங்களுக்கும் FIR (முதல் தகவல் அறிக்கை) பதிவு செய்யலாம்.
- அத்தகைய FIRகள் 24 மணி நேரத்திற்குள் மின்னணு மற்றும் கோப்புகள் வழியே அதற்குரிய காவல் நிலையத்திற்கு மாற்றப்பட வேண்டும்.
- இது நீதிமன்றங்களால் அங்கீகரிக்கப்பட்ட மின்னஞ்சல், OTP மூலம் சரிபார்க்கப்பட்ட அலை பேசி எண்கள் அல்லது நிலையான செய்தித்தளங்கள் மூலம் அதற்கு என்று அழைப்பாணைகளை வழங்க வழி வகுக்கும்.
- அழைப்பாணைகளுக்கானச் சேவைகளும் எண்ணிம முறையில் பதிவு செய்யப்பட்டு கண்காணிக்கப் படுகிறது இதனால் மேலும் பதில் செய்திகள் அல்லது தானியங்கி இணைப்புகள் மூலம் உரிய சேவையை நிறுவ முடியும்.
- விதிகளின்படி, eSakshya என்ற அலைபேசி செயலியானது இப்போது ஒலி-காணொளி ஆதாரங்களைப் பதிவு செய்வதற்கும், குற்றக் காட்சிகள் அல்லது சாட்சிகளின் புகைப்படங்களைப் பதிவேற்றுவதற்கும், மாறாத SID தொகுப்புகளை உருவாக்குவதற்கும் (பாதுகாப்பான, புவிசார் குறியிடப்பட்ட, ஹாஷ் சரிபார்ப்புடன் நேர முத்திரையிடப்பட்ட சான்றுகள்) கட்டாயமாக்கப்பட்டுள்ளது.
- CCTNS -II (குற்றம் மற்றும் குற்றவியல் வலையமைப்பு), eSakshya மற்றும் மின்-

அழைப்பாணைகள் போன்ற எண்ணிமத் தளங்களின் சோதனை நிறைவடைந்ததை தமிழ்நாடு காவல்துறை உறுதி செய்துள்ளது.




## முதலாம் ராஜேந்திர சோழனின் படையெடுப்பின் 1000வது ஆண்டு நிறைவு




- ❖ ராஜேந்திர சோழனின் கங்கைச் சமவெளிக்கான இராணுவப் படையெடுப்பு கங்கை கொண்ட சோழபுரம் கட்டுவதற்கு உத்வேகம் அளித்தது.
- ❖ முதலாம் ராஜேந்திர சோழனின் வடக்கு திசைப் படையெடுப்பின் 1000வது ஆண்டு நிறைவை தமிழ்நாடு இந்த ஆண்டு கொண்டாடுகிறது.
- ❖ ராஜேந்திர சோழன் 'கங்கை கொண்ட சோழன்' என்ற பட்டத்தை ஏற்று வெற்றியைக் கொண்டாடினார்.
- ❖ அவர் இன்றைய அரியலூர் மாவட்டத்தில் உள்ள கங்கை கொண்ட சோழபுரத்தையும்

கட்டினார்.

- இது யுனெஸ்கோவால் பட்டியலிடப்பட்ட கட்டிடக் கலைகளில் ஒன்றான கங்கை கொண்ட சோழீஸ்வரத்துடன் இடம்பெற்றுள்ளது.
- இது யுனெஸ்கோவால் மூன்று பெரிய வாழும் சோழ கோயில்களில் ஒன்றாக பட்டியலிடப் பட்டுள்ளது.
- இது பிரகதீஸ்வரர் கோயில் என்று மிகவும் பிரபலமாக அறியப்படுகிறது.
- கங்கை கொண்ட சோழபுரம் கி.பி 1025 ஆம் ஆண்டு முதல் சோழ வம்சத்தின் வீழ்ச்சி காலமான கி.பி 1279 ஆண்டு வரை தலைநகராக இருந்தது.
- வடக்கில் துங்கபத்ரா முதல் தெற்கில் சிலோன் வரையில் முழு தென்னிந்தியாவின் விவகாரங்களையும் இந்த நகரம் கட்டுப்படுத்தியது.
- இது 11-12 ஆம் நூற்றாண்டுகளில் இரண்டாவது மிகவும் பெரிய மற்றும் முக்கியமான நகரமாகவும், பாண்டிய நாட்டில் மதுரை மற்றும் சேர நாட்டில் கரூர் போன்று அரசியல், வணிக மற்றும் கலாச்சார நடவடிக்கைகளின் மையமாகவும் இருந்தது.
- ஆயினும் கூட, கங்கை கொண்ட சோழபுரம் கோயிலில் முதலாம் ராஜேந்திர சோழனின் கல்வெட்டு எதுவும் இல்லை.
- அவரது மகன் வீர ராஜேந்திரனின் கல்வெட்டிலிருந்தே, அவரது தந்தை இந்தக் கோயிலைக் கட்டியதாகத் தெரிகிறது.
- ராஜேந்திரனின் மூன்றாவது மகனான வீர ராஜேந்திரனின் கல்வெட்டு என்பது, கங்கை கொண்ட சோழபுரத்தில் உள்ள அரண்மனையை சோழ-கேரளன் திருமாளிகை என்று குறிப்பிடுகிறது.
- முன்னதாக, விஜயாலயனால் முத்தரையர் குலத் தலைவர்களிடமிருந்து தஞ்சாவூர் கைப்பற்றப்பட்டதிலிருந்து அது சோழர்களின் தலைநகராக இருந்தது.
- முதலாம் ராஜ ராஜன் காலமான சில ஆண்டுகளுக்குள், அவரது மகன் ராஜேந்திரன் தனது தலைநகரைக் கங்கை கொண்ட சோழபுரத்திற்கு மாற்றினார்.
- நகரம், அதன் கோயில் மற்றும் சோழ கங்கம் என்று அழைக்கப்படும் அதன் பெரிய ஏரி ஆகியவை முதலாம் ராஜேந்திர சோழனின் (1012-1044 CE) குறிப்பிட்ட சாதனைகளின் இணைந்தவொரு அமைப்பாக உள்ளன.
- திருவலங்காடு, எசலம் மற்றும் கரந்தை செப்புத் தகடுகள், பல கல்வெட்டுகள் மற்றும் இலக்கியப் படைப்புகள் அவரது வெற்றியைக் கொண்டாடுகின்றன.
- முதலாம் ராஜேந்திர சோழன் கங்கைச் சமவெளிப் படையெடுப்பின் போது, கலிங்க ஆட்சியாளர் மற்றும் வங்காளத்தின் பால ஆட்சியாளரான மகிபாலன் உட்பட பல மன்னர்களையும் அரசர் குலத் தலைவர்களையும் தோற்கடித்தார்.
- திருவலங்காடுச் செப்புத் தகடுகளின் படி, தோற்கடிக்கப்பட்ட மன்னர்கள் கங்கை நீரைத் தங்கள் தலையில் சுமந்து கொண்டு கங்கை கொண்ட சோழபுரத்திற்கு எடுத்துச் செல்லும்படி கட்டாயப்படுத்தப்பட்டனர்.
- தற்போது பொன்னேரி என்று அழைக்கப்படும் சோழ கங்கத்தில் அந்த நீரானது ஊற்றப் பட்டது.
- ராஜேந்திரன் தனது தலைநகரில் கங்கையின் நீருடன் சோழ கங்கை என்ற குளம் அமைத்து 'வெற்றியின் ஜலத் தூண்' (கங்கை-ஜலமயம் ஜெயஸ்தம்பம்) ஒன்றை அமைத்தார்.
- இக்கோட்டையின் விரிவான விளக்கம் பற்றி ஒட்டக் கூத்தரின் மூவர் உலாவில் இருந்து அறியலாம்.
- ராஜ ராஜ சோழன் உலா எனும் நூல் கிட்டத்தட்ட அந்த நகரத்தின் அனைத்து முக்கிய

இடங்களின் விவரத்தையும் தருகிறது.

- ஜெயங்கொண்டார் இயற்றிய கலிங்கத்துப்பரணியில் இந்த நகரம் கங்காபுரி என்று குறிப்பிடப்படுகிறது.

# தேசியச் செய்திகள்

## நண்பர்கள் குழு (GoF) - ஐ.நா. தலைமையகம்

- அமைதி காக்கும் படையினருக்கு எதிரான குற்றங்களுக்கான பொறுப்புக் கூறலை ஆதரிக்கும் வகையில் ஐ.நா. குழுவின் இணைத் தலைவராக இந்தியா உள்ளது.
- தீர்மான எண் 2589 என்பதைத் தொடர்ந்து, இந்தியாவின் ஐ.நா. பாதுகாப்பு சபைத் தலைமை வகித்த போது, 2022 ஆம் ஆண்டில் டிசம்பர் மாதத்தில் GoF தொடங்கப்பட்டது.
- ஐ.நா. அமைதி காக்கும் படையினரைக் குறி வைத்து நிகழும் குற்றங்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க இது அழைப்பு விடுத்தது.
- ஐ.நா. குறுகிய கால நோக்கங்களுக்கான துருப்புக்களை வழங்கும் மிகப்பெரிய நாடு இந்தியாவாகும்.





# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## Global Findex 2025 அறிக்கை

- உலக வங்கியின் இந்த அறிக்கையானது Global Findex 2025 என்று தலைப்பிடப்பட்டது.
- இது இந்தியாவின் எண்ணிம மற்றும் நிதி உள்ளடக்கத்தில் உள்ள சாதனைகளைப் பிரதிபலித்தது.
- இந்தியாவில் கணக்கு வைத்திருப்பவர்களின் அளவு சற்றேறக் குறைய 90 சதவீதமாக உள்ளது.
- இந்தியாவில் மூன்றில் ஒரு பங்கு வங்கிக் கணக்கு வைத்திருப்பவர்கள் வங்கி வசதிகளைப் பயன்படுத்துதாமல் செயலற்ற கணக்குகளைக் கொண்டுள்ளனர்.
- நாட்டின் மிக அதிகப்படியான செயலற்ற கணக்குகளுக்கு ஜன் தன் யோஜனா வங்கிக் கணக்குகள் ஒரு காரணமாக இருக்கலாம் என்று அந்த அறிக்கை குறிப்பிட்டது.

- 2021 ஆம் ஆண்டில் இந்திய வங்கிக் கணக்கு வைத்திருப்பவர்களில் 35% பேர் மட்டுமே செயலற்ற கணக்குகளைக் கொண்டிருந்தனர்.
- இது மற்ற வளரும் நாடுகளின் பொருளாதாரங்களில் சராசரியாக உள்ள 5% செயலற்ற கணக்குகளின் விகிதத்தை விட 7 மடங்கு அதிகம்.
- 16 சதவீதக் கணக்கு வைத்திருப்பவர்களுக்கு வங்கிக் கணக்கு செயல்பாட்டில் இல்லை.
- இது மற்ற அனைத்து குறைந்த மற்றும் நடுத்தர வருமானம கொண்ட நாடுகளின் பொருளாதாரங்களின் சராசரி 4 சதவீதம் ஆகும்.




# மாநிலச் செய்திகள்

## லுங்ஃபூன் ரோபுய் மென்ஹிர்கள்/நெடுங்கல் – மிசோரம்


- சம்பாய் மாவட்டத்தின் லியான்ஃபூய் கிராமத்தில் உள்ள லுங்ஃபூன் ரோபுய் மென்ஹிர்கள்/நெடுங்கல் ஆனது இந்தியத் தொல்லியல் ஆய்வுத் துறையால் (ASI) அதிகாரப் பூர்வமாக தேசிய முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நினைவுச் சின்னமாக அறிவிக்கப் பட்டுள்ளது.
- இதற்கான முறையான அறிவிப்பை கலாச்சார அமைச்சகம் வெளியிட்டது.
- இந்தப் பழங்கால கலைப் பொருட்களில் 114 சிக்கலாக செதுக்கப்பட்ட நினைவுக் கற்கள், மானுடத் துளைகள், பாறை ஓவியங்கள், Y - வடிவ மரத் தூண்கள் மற்றும் பழங்காலப் பாதைகள் ஆகியன அடங்கும்.
- மிசோரமில் இந்த அங்கீகாரத்தைப் பெற்ற இரண்டாவது மென்ஹிர்கள்/நெடுங்கல் தளம் இதுவாகும்.

- முதலாவது அங்கீகாரம் வாங்ச்சியா கிராமத்தில் உள்ள காவ்ச்சுவா ரோபுய் அல்லது பெரிய நுழைவாயில் என்றழைக்கப்படும் பகுதிக்கு வழங்கப்பட்டது.
- இது சுமார் 170க்கும் மேற்பட்ட பொறிப்புகளைக் மென்ஹிர்களை/நெடுங்கற்களைக் கொண்டுள்ளது.




## விளையாட்டுச் செய்திகள்

### ஸ்ரீஹரி நடராஜ் மற்றும் பி. பெனடிக்ஷன் ரோஹித்




- கர்நாடகாவைச் சேர்ந்த ஸ்ரீஹரி நடராஜ் ஆடவர்களுக்கான 200 மீட்டர் ஃப்ரீஸ்டைல் நீச்சல் பிரிவில் தனது சொந்த 'சிறந்த இந்தியர் செயல்திறன்' சாதனை நேரத்தை

முறியடித்தார்.

- தமிழ்நாட்டைச் சேர்ந்த பி. பெனடிக்சன் ரோஹித் 24 வினாடிகளுக்குள் 50 மீட்டர் butterfly வடிவ நீந்துதல் பிரிவில் நீந்திய முதல் இந்தியர் ஆனார்.
- இந்தச் சாதனைகள் அனைத்தும் ஜெர்மனியின் ரைன்-ருஹறில் நடைபெற்ற 2025 FISU உலக பல்கலைக் கழக விளையாட்டுப் போட்டிகளின் போது நடைபெற்றது.

# இதரச் செய்திகள்

## 2025 ஆம் ஆண்டில் 26 புதிய யுனெஸ்கோ தளங்கள்




- யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியத் தளங்களில் 2025 ஆம் ஆண்டிற்கான 26 புதிய தளங்களின் புதிய சேர்க்கைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.
- இந்த ஆண்டிற்கான 32 பரிந்துரைகளில், 21 கலாச்சாரம் சார்ந்த தளம், நான்கு இயற்கை சார்ந்த தளம் மற்றும் ஒரு கலப்புத் தளத்திற்கு உலகப் பாரம்பரிய அந்தஸ்து வழங்கப் பட்டது.
- யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரியக் குழு 2025 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பிரான்சின் பாரிஸில் அதன் 47 வது கூட்டத்திற்காக கூடியது.
- யுனெஸ்கோவின் உலகப் பாரம்பரிய மாநாடு 1972 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
- 2025 வாக்கில், இந்தியா புகழ்பெற்ற 44 உலகப் பாரம்பரியத் தளங்களைக் கொண்டு உள்ளது.
- இதில் 35 கலாச்சாரம் சார்ந்த தளம், 7 இயற்கை சார்ந்த தளம் மற்றும் 1 கலப்புத் தளம் ஆகியவை அடங்கும்.
- மராட்டிய இராணுவ நிலப்பரப்புகள் 44வது யுனெஸ்கோவின் பாரம்பரியத் தளமாகும்.
- 2025 ஆம் ஆண்டு ஜூலை மாத நிலவரப்படி, 170 நாடுகளில் மொத்தம் 1,248 உலகப் பாரம்பரியத் தளங்கள் உள்ளன.
- தேர்ந்தெடுக்கப்பட்ட 61 தளங்களுடன் இத்தாலி அதிக தளங்களைக் கொண்ட நாடாக உள்ளது, அதைத் தொடர்ந்து சீனா 60 தளங்களையும், ஜெர்மனி 55 தளங்களையும், பிரான்ஸ் 54 தளங்களையும் கொண்டுள்ளது.

- ஐ.நா.வின் ஒரே ஒரு உறுப்பு நாடான லிச்சென்ஸ்டீன் மட்டுமே உலகப் பாரம்பரிய ஒப்பந்தத்தை அங்கீகரிக்கவில்லை.
- மொத்தம் 44 உலக பாரம்பரியத் தளங்களுடன், இந்தியா இப்போது உலகளவில் 6வது இடத்திலும், ஆசியா-பசிபிக் பகுதியில் சீனாவுக்கு அடுத்து 2வது இடத்திலும் உள்ளது.

☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆ ☆